**செய்தி வெளியீடு எண்: 99/2022** **நாள்: 05.11.2022**

**பத்திரிக்கை செய்தி**

**கொச்சியில் நடைபெற்ற நகர்ப்புற நகர்வு இந்தியா மாநாடு மற்றும் எக்ஸ்போவில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன கண்காட்சி அரங்கம் இடம் பெற்றுள்ளது**

கொச்சியில் நடைபெற்ற நகர்ப்புற நகர்வு இந்தியா (UMI) மாநாடு மற்றும் எக்ஸ்போ என்பது இந்திய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார துறை அமைச்சகத்தால் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியை மாண்புமிகு ஒன்றிய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி அவர்கள் தொடங்கி வைத்தார். இந்த கண்காட்சி 2022-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4, 5 மற்றும் 6-ஆம் தேதிகளில் நடைபெறுகிறது. இந்த மாநாடு மற்றும் எக்ஸ்போ நகர்ப்புற போக்குவரத்துடன் தொடர்புடைய சிக்கல்களைத் தீர்க்க மாநில மற்றும் நகர்ப்புற அளவில் திறன்களை உருவாக்குவதற்கு வலுவான முக்கியத்துவம் அளிக்கிறது.

நிலையான போக்குவரத்து அமைப்புகளை உருவாக்குவதே இம்மாட்டின் நோக்கம். சிறந்த நகர்ப்புற போக்குவரத்து நடைமுறைகளுடன் புதுப்பித்த நிலையை உருவாக்குவதில் முக்கிய முடிவெடுப்பவர்கள் மற்றும் தொழில்நுட்ப பிரதிநிதிகள், வல்லுநர்கள், கல்வியாளர்கள், சிவில் சமூகம், தொழில்நுட்பம் சேவை வழங்குநர்கள், போக்குவரத்தில் உள்ள மற்ற பங்குதாரர்களுடன் தொடர்புகொள்வதற்கான வாய்ப்பை இந்த மாநாடு உருவாக்குகிறது. அவர்களின் நகர்ப்புற போக்குவரத்தை மேம்படுத்துதல் இதிலுள்ள பிரச்சனைகளை தீர்வுகாண நடவடிக்கை எடுக்க பரிந்துரைகும் ஒரு மன்றமாகும்.

நகர்ப்புற போக்குவரத்து தொழில்நுட்பம் மற்றும் சிறந்த போக்குவரத்து திட்டங்களை செயல்படுத்துதல், புதிய யோசனைகளை பரப்புதல் அவற்றை காட்சிபடுத்துதல் இவையெல்லாம் எக்ஸ்போ UMI இன் அம்சமாகும். சிறந்த கண்காட்சியாளர்கள் விருதுக்காக நடுவர் மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

நகர்ப்புற போக்குவரத்தில் சிறந்து விளங்குபவர்களுக்கு தேர்வு குழுவால் தேர்வு செய்யப்பட்டு சிறந்த நகர்ப்புற போக்குவரத்துக்கான விருது வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார துறை அமைச்சகத்தால் வழங்கப்படுகின்றது.

இந்த கண்காட்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மு.அ.சித்திக், இ.அ.ப., சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), டி. அர்ச்சுனன் (திட்டங்கள்), உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றனர்.

இந்த கண்காட்சியில் சென்னை, குஜராத், மகாராஷ்டிரா, டெல்லி, கொச்சி, பெங்களூரு மெட்ரோ மற்றும் பல்வேறு தொழில்நுட்ப நிறுவனங்கள் பங்கேற்றனர்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட கண்காட்சி அரங்கில் பொழுதுபோக்கு நிகழ்வுகள், பயணிகளுக்கான வசதிகள், மெட்ரோ இரயிலின் உள்கட்டமைப்பு வசதிகள், சென்னை மெட்ரோ இரயிலின் திட்டம் கட்டம் 2-ன் கட்டுமான பணிகள் போன்ற பல்வேறு புகைப்படங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. மேலும் இந்த கண்காட்சியில் திருமயிலை மெட்ரோ இரயில் நிலையத்தின் மாதிரி வடிவமைப்பு வைக்கப்பட்டிருந்தது. இந்த மாதிரி வடிவமைப்பு இங்கு வருகை தந்த பார்வையாளர்கள் மத்தியில் பிரமிப்படைய வைத்தது. அதோடு இந்த கட்டிட அமைப்பு சவாலான பணியாக இருப்பதாக பார்வையாளர்கள் தெரிவித்தார்கள்.

திருமயிலை சுரங்கப்பாதை பரிமாற்ற மெட்ரோ இரயில் நிலையம் மயிலாப்பூரில் உள்ள LUZ சந்திப்பில் அமைந்துள்ளது. இது சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம் - 2ல் வழித்தடம் - 3 மற்றும் வழித்தடம் - 4 க்கான ஒரு பரிமாற்ற நிலையம் மற்றும் இது மொத்தம் 4854.4 Sqw. பொதுத்தளம், கமர்ஷியல் லெவல், அப்பர் நடைமேடை, ஐலேண்ட் நடைமேடை மற்றும் லோயர் நடைமேடை என நான்கு நிலைகளுடன் தரைக்கு கீழே 35மீ (115 அடி) ஆழத்தில் இந்த நிலையம் அமையவுள்ளது. திருமயிலை என்பது வழித்தடம் - 3ல் மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் மற்றும் வழித்தடம் - 4ல் பூந்தமல்லி பைபாஸ் முதல் கலங்கரை விளக்கம் இடையே ஒரு பரிமாற்றம் ஆகும், இது டி-வடிவ நிலையமாகும், இது வழித்தடம் -3இல் 2 அடுக்கு சுரங்கங்களையும், வழித்தடம்-4-இல் இணையான சுரங்கப்பாதையையும் கொண்டுள்ளது.

இந்த நிலையங்களில் நான்கு சுரங்கப்பாதை துளையிடும் இயந்திரங்கள் வெவ்வேறு நிலைகளில் பயன்படுத்தப்படுகின்றன. திருமயிலை நிலையம் 5 நுழைவாயில்களைக் கொண்டுள்ளது, இது பயணிகள் நிலையத்தை அணுக எளிதாக இருக்கும். இது MRTS திருமயிலை நிலையம், பேருந்து நிறுத்தம் மற்றும் கபாலீஸ்வரர் கோவில் ஆகியவற்றுக்கு முக்கிய மல்டிமாடல் இணைப்பைக் கொண்டுள்ளது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**